# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2182/22 - 2020 ජූනි මස 30 වැනි අඟහරුවාදා - 2020.06.30

*2182/22 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்**

14 ஆம் பிரிவின் கீழான கட்டளை

கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் மூலம் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரின் உடன்பாட்டுடன், இதனகத்துள்ள அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பொருளுக்கு நேரொத்ததாக 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதிய 2047/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட, 2020, யூன் மாதம் 03 ஆந் திகதிய 2178/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி ஊடாக திருத்தியமைக்கப்பட்ட கட்டளையிலுள்ள அட்டவணையில் (IV) ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள செஸ் வரி விகிதமானது 2020, யூலை 01 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறுமாறு திருத்தியமைக்கப் படுவதாக இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

**பிரசன்ன ரணதுங்க,**  
கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர்.

கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சு,  
கொழும்பு 01,  
2020, யூன் 30.

**அட்டவணை**

| இ. ப. த. இல. (I) | இ. மு. கு. இல. (II) | | விபரம் (III) | செஸ்வரி விகிதம் (IV) |
|---|---|---|---|---|
| **25.23** | | | **நிறமூட்டப்பட்ட அல்லது (கிளிங்கர்) உருவிலுள்ள அல்லது இவ்விரண்டுமல்லாத "போர்ட்லண்ட் சீமெந்து அலுமினிஸ் சீமெந்து எரிமலைக் குழம்பு சேர் சீமெந்தம் சுப்பர் சல்பேற்றுச் சீமெந்தும் அது போன்று நீரழுத்தச் சீமெந்துகளும்.** | |
| | 2523.10 | - | சீமெந்து உருக்காங்கல் (கிளிங்கர்) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 1.00 |

08-75